செய்தி வெளியீடு எண்: 312 நாள் : 30.06.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (30.6.2016) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல்துறையினரின் ரோந்து பணியினை மேம்படுத்தும் வகையில் 100 இருசக்கர வாகனங்களையும், 250 மிதிவண்டிகளையும் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக 100 உயர்ரக மின்னணு ரசீது கருவிகளை (E-challan machines) வழங்கினார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

சென்னை பெருநகர காவல்துறையின் ரோந்துப் பணியினை மேம்படுத்தவும், மக்கள் நெருக்கம் நிறைந்த பகுதிகளிலும், குறுகலான தெருக்களிலும் ரோந்து பணியினை தீவிரப்படுத்தும் வகையிலும், ஜிபிஎஸ் கருவிகள், மின்னணு அறிவிப்பு பலகைகள், தொலை தொடர்பு கருவிகள் போன்ற நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்ட நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வழங்கியுள்ளதன் காரணமாக சென்னை பெருநகர காவல்துறையினர் ரோந்துப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள்.

சென்னை பெருநகர காவல்துறையினரின் ரோந்து பணியினை மேலும் மேம்படுத்தும் வகையில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 100 இருசக்கர வாகனங்களையும், 250 மிதிவண்டிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த ரோந்து பணியில் ஈடுபடும் சென்னை பெருநகர காவல்துறையின் ரோந்து காவலர்களுக்கு, தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்ட மேல்சட்டை, தலைக்கவசம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இருசக்கர வாகனங்களிலும், மிதிவண்டிகளிலும் ஒலி எழுப்பான்கள், LED விளக்குகள் உள்ளிட்ட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் ரோந்து காவலர்கள் குறுகிய தெருக்களிலும், மக்கள் நெருக்கடி உள்ள பகுதிகளிலும் ரோந்து பணிகளை மேற்கொள்ள இயலும்.

போக்குவரத்து விதிகளை மீறும் வாகனஓட்டிகளுக்கு விதிக்கப்படும் உடனடி அபராதங்களுக்கு மின்னணு ரசீது வழங்கும் முறையினை (Electronic Challan System for Spot-fining Traffic Violators) மேலும் நவீனப்படுத்தும் வகையில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக, 1 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 100 உயர்ரக மின்னணு ரசீது கருவிகளை (E-challan machines) வழங்கும் அடையாளமாக 5 போக்குவரத்து காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று உயர்ரக மின்னணு ரசீது கருவிகளை வழங்கினார்கள்.

போக்குவரத்து விதிகளை மீறும் வாகனஓட்டிகளுக்கு விதிக்கப்படும் உடனடி அபராதங்களுக்கு மின்னணு ரசீது வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 300 மின்னணு ரசீது வழங்கும் கருவிகள் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்ட 100 உயர்ரக மின்னணு ரசீது கருவிகள் மூலம் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் தங்கள் பணியினை மேலும் செம்மையாக செய்ய இயலும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), உள்துறை முதன்மைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. அசோக் குமார், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 30.6.2016